முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1557

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.01.2024,** புதன்கிழமை

1. அறம் போற்றும் ஞான வள்ளலே
   அகிலம் காக்கும் ஞான தேசிகனே
   வரம் கூட்டும் கலியுகத்தின் ஞானியே
   வள்ளலே வாழுகின்ற தவசியே
2. தவசியே அரங்கனே உந்தனுக்கு
   தக்கபடி சுப்ரமணியர் யானும்
   அவனியில் ஞான அறிவுரை ஆசி
   அருளுவேன் சோபகிருது சிலை திங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 18 ம் நாள், 03.01.2024, புதன்கிழமை)
3. தன்னிலே அரங்கன் சக்திக்குள்
   தண்டாயுதன் யான் நீக்கமற கலந்து
   மண்ணுலகை காக்கும் வரமாக
   மக்களுக்கெல்லாம் மகாமந்திர தீட்சை வழங்கி
4. வழங்கியே அரங்கன் வழி ஆறுமுகன் யான்
   வையகத்தை காத்து வருகின்றேன்
   அறமெனும் மகா சக்தி கொண்டு
   அகிலத்தையே பசிபிணி விரட்டி
5. விரட்டியே அற்புதம் நடத்துகின்றேன் அன்னதனால் ஓங்காரக்குடில் நோக்கி
   அகிலத்தார் ஒன்றிணைந்து வந்து இனிதே
   வகைபட அரங்கன் கொள்கைவழி
   வையகத்தை காக்கும் புது முயற்சிகளில்
6. முயற்சிகளில் உலகோர் இறங்கி
   புண்ணிய பலம் கூட்டி வர
   தயவான சக்திகளாக ஞானப்படைகள்
   தரணி எங்கும் அரங்கன் தொண்டர்களாக

7. ஆகவே மாற்றம் கண்டு உலகில்
அற்புதம் அரங்கனால் நடக்கும்
அகிலத்துக்கு ஞான ஆட்சி மலரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–